اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمٰنُ
وُدًّا ﴿٩٦﴾ فَاِنَّمَا يَسَّرْنٰهُ بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ الْمُتَّقِيْنَ وَتُنْذِرَ
بِهٖ قَوْمًا لُّدًّا ﴿٩٧﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنْ قَرْنٍ ؕ هَلْ تُحِسُّ
مِنْهُمْ مِّنْ اَحَدٍ اَوْ تَسْمَعُ لَهُمْ رِكْزًا ﴿٩٨﴾ ع ٦ النصف

سُوْرَةُ طٰهٰ مَكِّيَّةٌ وَّهِيَ مِائَةٌ وَّخَمْسٌ وَّثَلٰثُوْنَ اٰيَةً وَّثَمٰنُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

طٰهٰ ﴿١﴾ مَاۤ اَنْزَلْنَا عَلَيْكَ الْقُرْاٰنَ لِتَشْقٰۤى ﴿٢﴾ اِلَّا تَذْكِرَةً لِّمَنْ
يَّخْشٰى ﴿٣﴾ تَنْزِيْلًا مِّمَّنْ خَلَقَ الْاَرْضَ وَالسَّمٰوٰتِ الْعُلٰى ﴿٤﴾
اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى ﴿٥﴾ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى
الْاَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى ﴿٦﴾ وَاِنْ تَجْهَرْ بِالْقَوْلِ
فَاِنَّهٗ يَعْلَمُ السِّرَّ وَاَخْفٰى ﴿٧﴾ اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَهُ الْاَسْمَآءُ
الْحُسْنٰى ﴿٨﴾ وَهَلْ اَتٰىكَ حَدِيْثُ مُوْسٰى ﴿٩﴾ اِذْ رَاٰ نَارًا فَقَالَ وقف لازم
لِاَهْلِهِ امْكُثُوْۤا اِنِّىْۤ اٰنَسْتُ نَارًا لَّعَلِّىْۤ اٰتِيْكُمْ مِّنْهَا بِقَبَسٍ اَوْ
اَجِدُ عَلَى النَّارِ هُدًى ﴿١٠﴾ فَلَمَّاۤ اَتٰىهَا نُوْدِىَ يٰمُوْسٰى ﴿١١﴾ اِنِّىْۤ اَنَا
رَبُّكَ فَاخْلَعْ نَعْلَيْكَ ۚ اِنَّكَ بِالْوَادِ الْمُقَدَّسِ طُوًى ﴿١٢﴾

96. நிச்சயமாக விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையோர் அவர்களுக்கு (விசுவாசிகளின் இதயங்களில்) நேசத்தையும் அர்ரஹ்மான் நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுப்பான்.

97. (நபியே!) உம்முடைய மொழியில் நாம் இதை (இறக்கி,) எளிதாக்கி வைத்ததெல்லாம், இதைக் கொண்டு நீர் பயபக்தியுடையவர்களுக்கு நன்மாராயங் கூறுவதற்காகவும், இன்னும், இதனைக் கொண்டு வீண் தர்க்கம் செய்யும் சமூகத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும்தான்.

98. அவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்திருக்கிறோம்; அவர்களில் எவரையேனும் நீர் காண்கின்றீரா? அல்லது அவர்களுடைய இலேசான சப்தத்தையேனும் நீர் கேட்கின்றீரா?

அத்தியாயம் : 20

## தாஹா

வசனங்கள் : 135 மக்கீ ருகூஃகள் : 8

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. தா ஹா.

2. நீர் சங்கடப்படுவதற்காக (இந்தக்) குர்ஆனை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை.

3. (அல்லாஹ்வாகிய அவனை) பயந்தோருக்கு உபதேசமாகவே அன்றி (இதனை நாம் இறக்கவில்லை).

4. பூமியையும், உயர்ந்த வானங்களையும் படைத்தவனிடமிருந்து (இவ்வேதம்) இறக்கப்பட்டுள்ளது.

5. அர்ரஹ்மான் (தன் கண்ணியத்திற்குத்தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின்மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்.

6. வானங்களிலுள்ளவையும், பூமியில் உள்ளவையும், இவ்விரண்டிற்கு மத்தியில் உள்ளவையும், பூமிக்குக் கீழ் (ஈரமான மண்ணுக்கடியில்) உள்ளவையும் அவனுக்கே உரியவையாகும்.

7. (நபியே! உம்) சொல்லை நீர் சப்தமாகக் கூறினாலும், நிச்சயமாக அவன் இரகசியத்தையும் அதைவிட மறைவானதையும் அறிகிறான்.

8. அல்லாஹ்_ அவனைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை; அவனுக்கு அழகான (பல) பெயர்கள் இருக்கின்றன.

9. இன்னும், (நபியே!) மூஸாவின் செய்தி உம்மிடம் வந்ததா?

10. (தூர் என்னும் மலைமீது) நெருப்பை அவர் கண்டபோது, தன் குடும்பத்தினரிடம், "நீங்கள் (இங்கு சிறிது) தங்குங்கள்; நிச்சயமாக நான் நெருப்பைக் காண்கிறேன்; அதிலிருந்து ஒரு தீப்பந்தத்தை உங்களுக்குக் கொண்டு வரவோ, அல்லது நெருப்பி(ன் வெளிச்சத்தி)னால் வழியை நான் பெறவோ செய்யலாம்" என்றார்.

11. ஆகவே, அவர் அதனிடம் வரவே மூஸாவே! என அவர் அழைக்கப்பட்டார்.

12. "நிச்சயமாக நான் தான் உமதிரட்சகன்; ஆகவே உம்முடைய காலணிகள் இரண்டையும் கழற்றிவிடும்; நிச்சயமாக நீர் "துவா" என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் இருக்கிறீர்."

وَاَنَا اخْتَرْتُكَ فَاسْتَمِعْ لِمَا يُوْحٰى ﴿١٣﴾ اِنَّنِیْۤ اَنَا اللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّاۤ
اَنَا فَاعْبُدْنِیْ ۙ وَاَقِمِ الصَّلٰوةَ لِذِكْرِیْ ﴿١٤﴾ اِنَّ السَّاعَةَ اٰتِیَةٌ
اَكَادُ اُخْفِیْهَا لِتُجْزٰى كُلُّ نَفْسٍۭ بِمَا تَسْعٰى ﴿١٥﴾ فَلَا یَصُدَّنَّكَ عَنْهَا
مَنْ لَّا یُؤْمِنُ بِهَا وَاتَّبَعَ هَوٰىهُ فَتَرْدٰى ﴿١٦﴾ وَمَا تِلْكَ بِیَمِیْنِكَ یٰمُوْسٰى ﴿١٧﴾
قَالَ هِیَ عَصَایَ ۚ اَتَوَكَّؤُا عَلَیْهَا وَاَهُشُّ بِهَا عَلٰى غَنَمِیْ وَلِیَ فِیْهَا
مَاٰرِبُ اُخْرٰى ﴿١٨﴾ قَالَ اَلْقِهَا یٰمُوْسٰى ﴿١٩﴾ فَاَلْقٰىهَا فَاِذَا هِیَ حَیَّةٌ
تَسْعٰى ﴿٢٠﴾ قَالَ خُذْهَا وَلَا تَخَفْ ٚ سَنُعِیْدُهَا سِیْرَتَهَا الْاُوْلٰى ﴿٢١﴾
وَاضْمُمْ یَدَكَ اِلٰى جَنَاحِكَ تَخْرُجْ بَیْضَآءَ مِنْ غَیْرِ سُوْٓءٍ اٰیَةً
اُخْرٰى ﴿٢٢﴾ لِنُرِیَكَ مِنْ اٰیٰتِنَا الْكُبْرٰى ﴿٢٣﴾ اِذْهَبْ اِلٰى فِرْعَوْنَ اِنَّهٗ
طَغٰى ﴿٢٤﴾ قَالَ رَبِّ اشْرَحْ لِیْ صَدْرِیْ ﴿٢٥﴾ وَیَسِّرْ لِیْۤ اَمْرِیْ ﴿٢٦﴾ وَاحْلُلْ ع ١٢/٢٤/١٠
عُقْدَةً مِّنْ لِّسَانِیْ ﴿٢٧﴾ یَفْقَهُوْا قَوْلِیْ ﴿٢٨﴾ وَاجْعَلْ لِّیْ وَزِیْرًا مِّنْ
اَهْلِیْ ﴿٢٩﴾ هٰرُوْنَ اَخِی ﴿٣٠﴾ اشْدُدْ بِهٖۤ اَزْرِیْ ﴿٣١﴾ وَاَشْرِكْهُ فِیْۤ اَمْرِیْ ﴿٣٢﴾
كَیْ نُسَبِّحَكَ كَثِیْرًا ﴿٣٣﴾ وَّنَذْكُرَكَ كَثِیْرًا ﴿٣٤﴾ اِنَّكَ كُنْتَ بِنَا
بَصِیْرًا ﴿٣٥﴾ قَالَ قَدْ اُوْتِیْتَ سُؤْلَكَ یٰمُوْسٰى ﴿٣٦﴾ وَلَقَدْ مَنَنَّا
عَلَیْكَ مَرَّةً اُخْرٰۤى ﴿٣٧﴾ اِذْ اَوْحَیْنَاۤ اِلٰۤى اُمِّكَ مَا یُوْحٰۤى ﴿٣٨﴾

13. மேலும், "நான் உம்மை (என்னுடைய தூதராக)த் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்; ஆதலால் (வஹீ மூலம் உமக்கு) அறிவிக்கப்படுபவைகளை நீர் செவியேற்பீராக"!

14. "நிச்சயமாக நான் தான் அல்லாஹ்; என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை; ஆகவே, என்னையே நீர் வணங்குவீராக! என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையையும் நிறை வேற்றுவீராக".

15. "நிச்சயமாக மறுமை வரக்கூடியதாக இருக்கிறது; ஒவ்வோர் ஆத்மாவும் அது முயற்சி செய்ததற்குத்தக்க கூலி வழங்கப்படுவதற்காக அதனை நான் (மனிதர்களுக்கு) மறைத்துவைக்க சமீபிக்கிறேன்" (முற்றிலும் மறைத்து வைத்துள்ளேன்).

16. ஆகவே, அதனை நம்பிக்கை கொள்ளாது, தன் (மன) இச்சையையும் பின்பற்றியவன் அதனைவிட்டும் திண்ணமாக உம்மைத் தடுத்து விடவேண்டாம். அவ்வாறாயின் நீர் அழிந்துவிடுவீர்! (என்று கூறி)

17. "மேலும், மூஸாவே! உமது வலது கையில் இருப்பது என்ன?" (என்றும் கேட்டான்.)

18. அ(தற்க)வர், "இது என்னுடைய கைத்தடி; இதன்மீது நான் சாய்ந்து கொள்வேன்; இதைக்கொண்டு என்னுடைய ஆடுகளுக்கு (த்தழை குழைகளைமரங்களிலிருந்து) பறிப்பேன்; இன்னும் இதில் எனக்கு வேறுபலதேவைகளும் இருக்கின்றன" என்று கூறினார்.

19. (அதற்கு அல்லாஹ்) "மூஸாவே! நீர் அதனை(த்தரையில்) போடுவீராக" என்று கூறினான்.

20. அப்பொழுது அவர் அதனைப்போட்டார்; அச்சமயமே அது நெளிந்துசெல்லும் ஒரு பெரியபாம்பாயிற்று.

21. "நீர் அதைப் பிடியும்; மேலும், பயப்படாதீர்; உடனே அதனைமுந்திய நிலைக்கே (கைத்தடியாக)நாம் மீட்டுவோம்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

22. மேலும் "உம்முடைய கையை உம்முடைய விலாப்புறத்தின் பால் சேர்ப்பீராக! அது இன்னொரு அத்தாட்சியாக எவ்விதத்தீங்குமின்றி வெண்மையாக வெளிவரும்.

23. "(இவ்வாறு) நம்முடைய பெரிய அத்தாட்சிகளிலிருந்து (சிலவற்றை) உமக்கு காண்பிப்பதற்காக (இவற்றைச் செய்யுமாறு நாம் கட்டளையிட்டோம்).

24. "நீர் ஃபிர் அவ்னிடம் செல்வீராக! நிச்சயமாக அவன் தன் (தகுதியை மறந்து இரட்சகனின்) வரம்பை மீறி விட்டான்" (என்றும் கூறினான்).

25. (அதற்கு மூஸா) கூறினார்: "என் இரட்சகனே! என் நெஞ்சத்தை (த் திடப்படுத்தி) விரிவாக்கி வைப்பாயாக"!

26. "என்னுடைய காரியத்தை எனக்கு எளிதாக்கியும் வைப்பாயாக!

27. "என் நாவிலுள்ள முடிச்சை அவிழ்த்தும் விடுவாயாக!

28. "(அப்பொழுது) என் சொல்லை அவர்கள் விளங்கிக் கொள் வார்கள்.

29. "என் குடும்பத்திலிருந்து எனக்கு உதவியாளரை ஆக்கியும் வைப்பாயாக!

30. "என் சகோதரர் ஹாரூனை (அவ்வாறு ஆக்கி வைப்பாயாக).

31. "அவரைக்கொண்டு என் பலத்தை உறுதிப்படுத்தி வைப்பாயாக!

32. "என் காரியங்களில் அவரைக் கூட்டாக்கியும் வைப்பாயாக!

33. நாங்கள் உன்னை அதிகமாகக் துதி செய்து போற்றுவதற்காகவும்;

34. "நாங்கள் உன்னை அதிகமாக நினைவு கூர்வதற்காகவும் (என் கோரிக்கைகளை ஏற்று அருள்வாயாக).

35. "நிச்சயமாக நீ எங்களை பார்க்கக்கூடியவனாகவே இருக்கிறாய்" (என்று மூஸா நபி பிரார்த்தனை செய்தார்).

36. (அதற்கு) "மூஸாவே! நீர் கேட்டவற்றை திட்டமாக நீர் கொடுக்கப்பட்டு விட்டீர்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

37. "மற்றொரு தடவையும் திட்டமாக நாம் உம்மீது பேரருள் புரிந்திருக்கிறோம்.

38. உமது தாய்க்கு (உம்மைப்பற்றி) அறிவிக்கப்பட வேண்டியவற்றை நாம் அறிவித்த சமயம்_(அதாவது)

اَنِ اقْذِفِيْهِ فِي التَّابُوْتِ فَاقْذِفِيْهِ فِي الْيَمِّ فَلْيُلْقِهِ الْيَمُّ
بِالسَّاحِلِ يَاْخُذْهُ عَدُوٌّ لِّيْ وَعَدُوٌّ لَّهٗ ؕ وَاَلْقَيْتُ عَلَيْكَ مَحَبَّةً
مِّنِّيْ ۚ وَلِتُصْنَعَ عَلٰى عَيْنِيْ ﴿۳۹﴾ اِذْ تَمْشِيْۤ اُخْتُكَ فَتَقُوْلُ هَلْ وقف لازم
اَدُلُّكُمْ عَلٰى مَنْ يَّكْفُلُهٗ ؕ فَرَجَعْنٰكَ اِلٰۤى اُمِّكَ كَيْ تَقَرَّ عَيْنُهَا
وَلَا تَحْزَنَ ؕ۬ وَقَتَلْتَ نَفْسًا فَنَجَّيْنٰكَ مِنَ الْغَمِّ وَفَتَنّٰكَ
فُتُوْنًا ۫ فَلَبِثْتَ سِنِيْنَ فِيْۤ اَهْلِ مَدْيَنَ ۬ۙ ثُمَّ جِئْتَ عَلٰى قَدَرٍ
يّٰمُوْسٰى ﴿۴۰﴾ وَاصْطَنَعْتُكَ لِنَفْسِيْ ﴿۴۱﴾ اِذْهَبْ اَنْتَ وَاَخُوْكَ بِاٰيٰتِيْ
وَلَا تَنِيَا فِيْ ذِكْرِيْ ﴿۴۲﴾ اِذْهَبَاۤ اِلٰى فِرْعَوْنَ اِنَّهٗ طَغٰى ﴿۴۳﴾ فَقُوْلَا لَهٗ
قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهٗ يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى ﴿۴۴﴾ قَالَا رَبَّنَاۤ اِنَّنَا نَخَافُ اَنْ
يَّفْرُطَ عَلَيْنَاۤ اَوْ اَنْ يَّطْغٰى ﴿۴۵﴾ قَالَ لَا تَخَافَاۤ اِنَّنِيْ مَعَكُمَاۤ اَسْمَعُ
وَاَرٰى ﴿۴۶﴾ فَاْتِيٰهُ فَقُوْلَاۤ اِنَّا رَسُوْلَا رَبِّكَ فَاَرْسِلْ مَعَنَا بَنِيْۤ
اِسْرَآءِيْلَ ۙ۬ وَلَا تُعَذِّبْهُمْ ؕ قَدْ جِئْنٰكَ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكَ ؕ وَالسَّلٰمُ
عَلٰى مَنِ اتَّبَعَ الْهُدٰى ﴿۴۷﴾ اِنَّا قَدْ اُوْحِيَ اِلَيْنَاۤ اَنَّ الْعَذَابَ عَلٰى مَنْ
كَذَّبَ وَتَوَلّٰى ﴿۴۸﴾ قَالَ فَمَنْ رَّبُّكُمَا يٰمُوْسٰى ﴿۴۹﴾ قَالَ رَبُّنَا الَّذِيْۤ اَعْطٰى
كُلَّ شَيْءٍ خَلْقَهٗ ثُمَّ هَدٰى ﴿۵۰﴾ قَالَ فَمَا بَالُ الْقُرُوْنِ الْاُوْلٰى ﴿۵۱﴾

39. "அவரை பேழையில் வைத்து (நைல்) நதியில் அதனை எறிந்துவிடு, அந்நதி அவரைக் கரையில் சேர்த்து விடும்; எனக்கு விரோதியும், அவருக்கு விரோதியாகவும் உள்ளவன் அவரை எடுத்துக்கொள்வான்" என்றும் (உம் தாய்க்கு அறிவித்தோம்); என்னிடமிருந்து அன்பையும் உம்மீது நான் பொழிந்தேன், இன்னும் என் கண் காணிப்பில் நீர் வளர்க்கப்படுவதற்காக.

40. உம் சகோதரி நடந்தபோது (அப்பேழையை எடுத்தவர்களிடம்) "அவருக்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் ஒருவரை (செவிலித்தாயை) உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கூறினாள். பின்னர், உமது தாயாரின்பால், அவரின் கண் குளிர்ந்திருப்பதற்காக இன்னும், அவர் கவலை கொள்ளாதிருப்பதற்காக உம்மை நாம் திருப்பிக் கொடுத்தோம்; இன்னும் நீர் ஒரு மனிதரைக் கொலை செய்து விட்டீர்; (அதன்) கவலையிலிருந்து உம்மை நாம் ஈடேற்றினோம்; இன்னும், உம்மை சோதிப்பதற்காக (பல சோதனைகளைக் கொண்டு) சோதித்தோம்; பின்னர் மத்யன் வாசிகளிடையே பல வருடங்கள் நீர் தங்கியிருந்தீர்; அதன் பின்னர் (நாம் உம்மை, முன்பு நம் தூதராக்க) நிர்ணயித்தபடி மூஸாவே நீர் வந்தீர்!

41. மேலும், உம்மை எனக்காக நான் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்.

42. (ஆகவே) "நீரும், உம்முடைய சகோதரரும் என்னுடைய அத்தாட்சிகளைக் கொண்டு செல்லுங்கள்; நீங்கள் இருவரும் என்னைத் தியானிப்பதில் சோர்வடைந்தும் விடாதீர்கள்".

43. "நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள்; நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்து விட்டான்.

44. ஆகவே, "நீங்கள் இருவரும் கனிவான சொல்லை அவனுக்குச் சொல்லுங்கள்; அதனால் அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சமடையலாம் (என்று அல்லாஹ் கூறினான்).

45. (அதற்கு) "எங்கள் இரட்சகனே! அவன் எங்களுக்கு (தீங்கிழைக்க) அவசரப்படவோ, அல்லது வரம்பு மீறவோ செய்யலாம் என்று நிச்சயமாக நாங்கள் பயப்படுகிறோம்" என்று அவ்விருவரும் கூறினார்கள்.

46. "நீங்கள் இருவரும் பயப்பட வேண்டாம்; நிச்சயமாக நான் உங்களிருவருடன் (யாவையும்) கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும் இருப்பேன் என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்".

47. "ஆகவே, நீங்களிருவரும் அவனிடம் வந்து, பின்னர், "நாங்கள் இருவரும் உன் இரட்சகனின் தூதர்கள்; இஸ்ராயீலின் மக்களை எங்களுடன் அனுப்பிவிடு; அவர்களை வேதனையும் செய்யாதே; திட்டமாக நாங்கள் உன் இரட்சகனிடமிருந்து அத்தாட்சியை உன்னிடம் கொண்டுவந்திருக்கின்றோம்; நேர்வழியைப் பின்பற்றியவர் மீது சாந்தியும் உண்டாவதாக!" என்று நீங்களிருவரும் கூறுங்கள்.

48. "நிச்சயமாக நாங்கள் _ எங்கள்பால் _ எவன் பொய்யாக்கிப் புறக்கணிக்கின்றானோ அவன் மீது நிச்சயமாக வேதனை ஏற்படுமென்று திட்டமாக (வஹீமூலம்) அறிவிக்கப்பட்டுள்ளது" (என்றும் கூறுங்கள்).

49. (அவ்விருவரும் ஃபிர்அவ்னிடம் வந்து கூறவே, அதற்கு) அவன் "மூஸாவே உங்களிருவரின் இரட்சகன் யார்?" என்று கேட்டான்.

50. (அதற்கு) "எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய தோற்றத்தை கொடுத்து பின்னர் வழியையும் காட்டியிருக்கிறானோ அவன்தான் எங்கள் இரட்சகன்" என்று அவர் கூறினார்.

51. (அதற்கு) அவன் "முன்னர் சென்றுபோன தலைமுறையினரின் (உண்மை) நிலையாது?" என்று கேட்டான்.

قَالَ عِلْمُهَا عِنْدَ رَبِّيْ فِيْ كِتٰبٍ ۚ لَا يَضِلُّ رَبِّيْ وَلَا يَنْسَى ﴿۵۲﴾
الَّذِيْ جَعَلَ لَكُمُ الْاَرْضَ مَهْدًا وَّسَلَكَ لَكُمْ فِيْهَا سُبُلًا وَّ
اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً ۭ فَاَخْرَجْنَا بِهٖٓ اَزْوَاجًا مِّنْ نَّبَاتٍ شَتّٰى ﴿۵۳﴾
كُلُوْا وَارْعَوْا اَنْعَامَكُمْ ۭ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّاُولِي النُّهٰى ﴿۵۴﴾ مِنْهَا ع ۲
خَلَقْنٰكُمْ وَفِيْهَا نُعِيْدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ تَارَةً اُخْرٰى ﴿۵۵﴾ وَلَقَدْ اَرَيْنٰهُ
اٰيٰتِنَا كُلَّهَا فَكَذَّبَ وَاَبٰى ﴿۵۶﴾ قَالَ اَجِئْتَنَا لِتُخْرِجَنَا مِنْ اَرْضِنَا
بِسِحْرِكَ يٰمُوْسٰى ﴿۵۷﴾ فَلَنَاْتِيَنَّكَ بِسِحْرٍ مِّثْلِهٖ فَاجْعَلْ بَيْنَنَا وَبَيْنَكَ
مَوْعِدًا لَّا نُخْلِفُهٗ نَحْنُ وَلَآ اَنْتَ مَكَانًا سُوًى ﴿۵۸﴾ قَالَ مَوْعِدُكُمْ
يَوْمُ الزِّيْنَةِ وَاَنْ يُّحْشَرَ النَّاسُ ضُحًى ﴿۵۹﴾ فَتَوَلّٰى فِرْعَوْنُ فَجَمَعَ
كَيْدَهٗ ثُمَّ اَتٰى ﴿۶۰﴾ قَالَ لَهُمْ مُّوْسٰى وَيْلَكُمْ لَا تَفْتَرُوْا عَلَى اللّٰهِ كَذِبًا
فَيُسْحِتَكُمْ بِعَذَابٍ ۚ وَقَدْ خَابَ مَنِ افْتَرٰى ﴿۶۱﴾ فَتَنَازَعُوْٓا اَمْرَهُمْ
بَيْنَهُمْ وَاَسَرُّوا النَّجْوٰى ﴿۶۲﴾ قَالُوْٓا اِنْ هٰذٰنِ لَسٰحِرٰنِ يُرِيْدٰنِ اَنْ
يُّخْرِجٰكُمْ مِّنْ اَرْضِكُمْ بِسِحْرِهِمَا وَيَذْهَبَا بِطَرِيْقَتِكُمُ الْمُثْلٰى ﴿۶۳﴾
فَاَجْمِعُوْا كَيْدَكُمْ ثُمَّ ائْتُوْا صَفًّا ۚ وَقَدْ اَفْلَحَ الْيَوْمَ مَنِ اسْتَعْلٰى ﴿۶۴﴾
قَالُوْا يٰمُوْسٰٓى اِمَّآ اَنْ تُلْقِيَ وَاِمَّآ اَنْ نَّكُوْنَ اَوَّلَ مَنْ اَلْقٰى ﴿۶۵﴾

52. அவர், "அது பற்றிய அறிவுஎன் இரட்சகனிடம் (இருக்கும் பதிவுப்) புத்தகத்தில் இருக்கின்றது; என் இரட்சகன் (அதில் யாதொன்றைத்) தவறிழைத்து (விட்டு) விடவுமாட்டான்; மறந்துவிடவும்மாட்டான்" என்று கூறினார்.

53. "(என்னுடைய இரட்சகன்) எத்தகையவனென்றால், அவன் பூமியை உங்களுக்கு விரிப்பாக அமைத்து, அதில் உங்களுக்காக பாதைகளையும் ஏற்படுத்தினான்; மேலும், வானத்திலிருந்து (மழை) நீரை இறக்கினான்; இதைக்கொண்டு நாம் பலதரப்பட்ட தாவரங்களிலிருந்து பலவகைகளை வெளிப்படுத்தி விட்டோம்" (என்று தன் இரட்சகனின் தகுதி பற்றி மூஸா கூறினார்).

54. "(அவற்றை) நீங்களும் உண்ணுங்கள்; உங்கள் (ஆடு, மாடு, ஒட்டகம், முதலிய) கால் நடைகளையும் மேயவிடுங்கள்; அறிவுடையோருக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

55. (பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப்படைத்தோம்; பின்னர், அதிலேயே நாம் உங்களை மீளவைப்போம்; மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்" (என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்).

56. இன்னும், நம்முடைய அத்தாட்சிகளை_ அவை யாவையும் நாம் அவனுக்குக் காண்பித்தோம்; ஆனால் அவனோ (அவை யாவற்றையும்) பொய்ப்படுத்தி விட்டான்; மேலும், (விசுவாசிக்காது) விலகிக் கொண்டான்.

57. "மூஸாவே! உம்முடைய சூனியத்தின் மூலம் எங்களை எங்களின் பூமியைவிட்டு வெளியேற்றுவதற்காகவா எங்களிடம் நீர் வந்தீர்?" என்று கூறினான்.

58. அவ்வாறாயின் இதைப்போன்ற சூனியத்தை(எதிராக)க்கொண்டு நிச்சயமாக நாங்களும் உம்மிடம் வருவோம்; ஆகவே, நாங்களோ அல்லது நீரோ, மாறுபடாது இருக்கக் கூடியவாறு மையமான இடத்தில் நமக்கும், உமக்குமிடையே ஒரு தவணையை(க் குறிப்பிட்டு)ஆக்குவீராக! என்று கூறினான்.

59. (அதற்கு மூஸா " உங்கள்) பண்டிகை நாளே உங்களுக்குத் தவணையாகும்; இன்னும், மனிதர்கள் யாவரும் முற்பகலிலேயே ஒன்று திரட்டப்பட்டு விடவேண்டும்" என்று கூறினார்.

60. பின்னர், ஃபிர்அவ்ன் (அங்கிருந்து) திரும்பிச் சென்று, (சூனியத்திற்குரிய) தன்னுடைய (சகல) சூழ்ச்சிகளையும் சேகரித்துக் கொண்டு பின்னர் (குறித்த இடத்திற்கு )வந்தான்.

61. மூஸா, அ(ங்கு கூடியிருந்த)வர்களிடம்: "உங்களுக்குக் கேடுதான். அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக் கட்டாதீர்கள்; (அவ்வாறு செய்தால்,) அவன் (தன்) வேதனையைக் கொண்டு உங்களை அழித்து விடுவான்; இன்னும், எவன் (பொய்யை) இட்டுக்கட்டுகிறானோ திட்டமாக அவன் நஷ்டப்பட்டு விட்டான்," என்று கூறினார்.

62. (இதைக்கேட்ட ) அவர்கள், தங்களுடைய காரியத்தில் தங்களுக்கிடையே தர்க்கித்துக் கொண்டு, இரகசியமாக ஆலோசனையும் செய்தனர்.

63. அவர்கள், "நிச்சயமாக இவ்விருவரும் இரு சூனியக்காரர்களே! தங்களுடைய சூனியத்தினால் உங்களை, உங்களுடைய பூமியை விட்டும் இவ்விருவரும் வெளியேற்றி விடவும், உங்களுடைய மேலான (மார்க்கப்)பாதையை இருவரும் போக்கி விடவும் இவ்விருவரும் நாடுகிறார்கள்" என்று கூறினார்கள்.

64. "ஆதலால் உங்கள்சூழ்ச்சித் திட்டத்தில் நீங்கள் உறுதிகொண்டு அதன் பின்னர் அணியாக வாருங்கள்; இன்றையத்தினம் (மற்றவரை) மிகைத்து விட்டவர் திட்டமாக வெற்றி பெறுவார்" என்று கூறினார்கள்.

65. பின்னர், (சூனியம் செய்ய வந்த) அவர்கள், (மூஸாவிடம் ) " மூஸாவே! ஒன்று நீர்போடுகிறீரா? அல்லது போடுபவரில் முதலாவதாக நாங்கள் இருக்கவா ?" என்று கேட்டார்கள்.

قَالَ بَلْ اَلْقُوْا ۚ فَاِذَا حِبَالُهُمْ وَعِصِيُّهُمْ يُخَيَّلُ اِلَيْهِ مِنْ سِحْرِهِمْ
اَنَّهَا تَسْعٰى ﴿٦٦﴾ فَاَوْجَسَ فِيْ نَفْسِهٖ خِيْفَةً مُّوْسٰى ﴿٦٧﴾ قُلْنَا لَا تَخَفْ
اِنَّكَ اَنْتَ الْاَعْلٰى ﴿٦٨﴾ وَاَلْقِ مَا فِيْ يَمِيْنِكَ تَلْقَفْ مَا صَنَعُوْا ۭ اِنَّمَا
صَنَعُوْا كَيْدُ سٰحِرٍ ۭ وَلَا يُفْلِحُ السَّاحِرُ حَيْثُ اَتٰى ﴿٦٩﴾ فَاُلْقِيَ السَّحَرَةُ
سُجَّدًا قَالُوْٓا اٰمَنَّا بِرَبِّ هٰرُوْنَ وَمُوْسٰى ﴿٧٠﴾ قَالَ اٰمَنْتُمْ لَهٗ قَبْلَ
اَنْ اٰذَنَ لَكُمْ ۭ اِنَّهٗ لَكَبِيْرُكُمُ الَّذِيْ عَلَّمَكُمُ السِّحْرَ ۚ فَلَاُقَطِّعَنَّ
اَيْدِيَكُمْ وَاَرْجُلَكُمْ مِّنْ خِلَافٍ وَّلَاُصَلِّبَنَّكُمْ فِيْ جُذُوْعِ النَّخْلِ ۡ
وَلَتَعْلَمُنَّ اَيُّنَآ اَشَدُّ عَذَابًا وَّاَبْقٰى ﴿٧١﴾ قَالُوْا لَنْ نُّؤْثِرَكَ عَلٰى مَا
جَاۗءَنَا مِنَ الْبَيِّنٰتِ وَالَّذِيْ فَطَرَنَا فَاقْضِ مَآ اَنْتَ قَاضٍ ۭ
اِنَّمَا تَقْضِيْ هٰذِهِ الْحَيٰوةَ الدُّنْيَا ﴿٧٢﴾ ۭ اِنَّآ اٰمَنَّا بِرَبِّنَا لِيَغْفِرَ لَنَا
خَطٰيٰنَا وَمَآ اَكْرَهْتَنَا عَلَيْهِ مِنَ السِّحْرِ ۭ وَاللّٰهُ خَيْرٌ وَّاَبْقٰى ﴿٧٣﴾ الثلثة
اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ ۭ لَا يَمُوْتُ فِيْهَا وَ
لَا يَحْيٰى ﴿٧٤﴾ وَمَنْ يَّاْتِهٖ مُؤْمِنًا قَدْ عَمِلَ الصّٰلِحٰتِ فَاُولٰۗىِٕكَ
لَهُمُ الدَّرَجٰتُ الْعُلٰى ﴿٧٥﴾ ۙ جَنّٰتُ عَدْنٍ تَجْرِيْ مِنْ تَحْتِهَا
الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ۭ وَذٰلِكَ جَزٰۗؤُا مَنْ تَزَكّٰى ﴿٧٦﴾ ع ٣/٢٢ ١٢

66. அ(தற்க)வர் "அவ்வாறன்று; நீங்கள் (முதலில்) போடுங்கள்" என்று கூறினார்; (அவர்கள் போடவே,போடப்பட்ட) அந்நேரத்தில் அவர்களுடைய கயிறுகளும் அவர்களுடைய தடிகளும், அவர்களின் சூனியத்தின் காரணமாக, நிச்சயமாகவே அவை(பாம்புகளாக)விரைந்து ஓடுவது போல் இவருக்குத் தோன்றியது.

67. ஆகவே,மூஸா தன் மனதில் பயத்தை உணர்ந்தார்.

68. (அது சமயம் அவரிடம்,) "நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நீர் தான் (இந்த சூனியக்காரர்களை மிகைத்து) மிகமேலோங்கியவர்" என்று நாம் கூறினோம்.

69. மேலும், " உமது வலக்கையில் இருப்பதை நீர் போடுவீராக; அவர்கள் செய்தவற்றை அது விழுங்கிவிடும்; அவர்கள் செய்ததெல்லாம் சூனியக்காரரின் சூழ்ச்சியே ஆகும்; சூனியக்காரன் எங்கு வந்த போதிலும் வெற்றி பெறமாட்டான்"(என்றும் கூறினோம்).

70. (மூஸா மேலோங்கிய பொழுது) அச்சூனியக்காரர்கள் சிரம் பணிந்தவர்களாக (ஸஜ்தாவில்) வீழ்த்தப்பட்டு, "நாங்கள் ஹாரூன், மூஸா ஆகிய இவ்விருவருடைய இரட்சகனை(க்கொண்டு)விசுவாசித்துவிட்டோம்", என்று கூறினார்கள்.

71. (இதனைக்கண்ட ஃபிர் அவ்ன்)"நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன் அவருக்கு நீங்கள் விசுவாசங் கொண்டு விட்டீர்கள்; உங்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுத்தாரே அத்தகைய உங்களின் பெரியவர் நிச்சயமாக அவர்தான். ஆகவே, நிச்சயமாக நான் உங்களது கைகளையும், உங்களது கால்களையும் மாறாக ( ஒரு பக்கத்துக் காலையும் மறு பக்கத்துக் கையையும்) துண்டிப்பேன்; இன்னும் பேரீச்ச மரங்களின் அடிப்பாகங்களில் உங்களை நிச்சயமாக நான் கழுவேற்றுவேன்; வேதனைசெய்வதில் மிகக் கடுமையானவரும், (அவ்வேதனையில்) மிக நிலையானவரும் நம்மில் யார் என நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்று கூறினான்.

72. (அதற்கவர்கள் ஃபிர் அவ்னிடம்) "எங்களுக்கு வந்து விட்ட தெளிவான அத்தாட்சிகளை விடவும், எங்களைப்படைத்தானே அவனை விடவும், உன்னை நாங்கள் (பெரிதாகக் கருதி) தேர்வு செய்யமாட்டோம்; ஆகவே, எதை நீ தீர்ப்புக் கூற இருக்கிறாயோ (அதை) நீ தீர்ப்புக் கூறிவிடு; நீ தீர்ப்புக் கூறுவதெல்லாம் இவ்வுலகவாழ்க்கையில்தான்" என்று கூறினர்.

73. "நிச்சயமாக நாங்கள் (மெய்யான) எங்கள் இரட்சகனையே விசுவாசித்தோம்; எங்களுடைய குற்றங்களையும், உன்னுடைய நிர்ப்பந்தத்தினால் நாங்கள் செய்த சூனிய(த்தின் குற்ற)ங்களையும் அவன் எங்களுக்கு மன்னித்துவிடுவான்; அல்லாஹ் மிக்க மேலானவனும், நிலைத்திருப்பவனும் ஆவான்" என்று கூறினார்கள்.

74. நிச்சயமாக எவன் தன் இரட்சகனிடம் குற்றவாளியாக வருகின்றானோ, அவனுக்கு நிச்சயமாக நரகம் இருக்கிறது. அதில் அவன் சாகவும் மாட்டான்; (சுகத்துடன்) வாழவும் மாட்டான்(வேதனையை அனுபவித்துக் கொண்டேயிருப்பான்).

75. மேலும், எவர் விசுவாசங்கொண்டவராக, திட்டமாக நற்கருமங்களைச் செய்த நிலையில் (அல்லாஹ்வாகிய) அவனிடத்தில் வருகின்றாரோ — அத்தகையோர்களுக்கு உயர் பதவிகள் இருக்கின்றன.

76. ( அத்தகையோருக்கு) நிலையான சொர்க்கங்கள் உண்டு; அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள்; மேலும், அது பரிசுத்தமானவருடைய கூலியாகும்.

وَلَقَدْ اَوْحَيْنَآ اِلٰى مُوْسٰٓى ۙ اَنْ اَسْرِ بِعِبَادِيْ فَاضْرِبْ
لَهُمْ طَرِيْقًا فِي الْبَحْرِ يَبَسًا ۙ لَّا تَخٰفُ دَرَكًا وَّلَا تَخْشٰى ﴿٧٧﴾
فَاَتْبَعَهُمْ فِرْعَوْنُ بِجُنُوْدِهٖ فَغَشِيَهُمْ مِّنَ الْيَمِّ مَا غَشِيَهُمْ ﴿٧٨﴾ ط
وَاَضَلَّ فِرْعَوْنُ قَوْمَهٗ وَمَا هَدٰى ﴿٧٩﴾ يٰبَنِيْٓ اِسْرَآءِيْلَ قَدْ
اَنْجَيْنٰكُمْ مِّنْ عَدُوِّكُمْ وَوٰعَدْنٰكُمْ جَانِبَ الطُّوْرِ الْاَيْمَنَ
وَنَزَّلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى ﴿٨٠﴾ كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا
رَزَقْنٰكُمْ وَلَا تَطْغَوْا فِيْهِ فَيَحِلَّ عَلَيْكُمْ غَضَبِيْ ۚ وَمَنْ
يَّحْلِلْ عَلَيْهِ غَضَبِيْ فَقَدْ هَوٰى ﴿٨١﴾ وَاِنِّيْ لَغَفَّارٌ لِّمَنْ
تَابَ وَاٰمَنَ وَعَمِلَ صَالِحًا ثُمَّ اهْتَدٰى ﴿٨٢﴾ وَمَآ اَعْجَلَكَ
عَنْ قَوْمِكَ يٰمُوْسٰى ﴿٨٣﴾ قَالَ هُمْ اُولَآءِ عَلٰٓى اَثَرِيْ وَ
عَجِلْتُ اِلَيْكَ رَبِّ لِتَرْضٰى ﴿٨٤﴾ قَالَ فَاِنَّا قَدْ فَتَنَّا
قَوْمَكَ مِنْۢ بَعْدِكَ وَاَضَلَّهُمُ السَّامِرِيُّ ﴿٨٥﴾ فَرَجَعَ
مُوْسٰٓى اِلٰى قَوْمِهٖ غَضْبَانَ اَسِفًا ۚ قَالَ يٰقَوْمِ اَلَمْ يَعِدْكُمْ
رَبُّكُمْ وَعْدًا حَسَنًا ۬ اَفَطَالَ عَلَيْكُمُ الْعَهْدُ اَمْ اَرَدْتُّمْ اَنْ
يَّحِلَّ عَلَيْكُمْ غَضَبٌ مِّنْ رَّبِّكُمْ فَاَخْلَفْتُمْ مَّوْعِدِيْ ﴿٨٦﴾

77. மேலும், நிச்சயமாக நாம், மூஸாவுக்கு "நீர் என்னுடைய அடியார்களை அழைத்துக் கொண்டு, இரவில் சென்றுவிடுவீராக! (வழியில்) கடலில் (உமது தடியால்) அடித்து உலர்ந்த வழியை அவர்களுக்கு ஏற்படுத்துவீராக! (உம்மை ஃபிர்அவ்ன்) அடைந்து விடுவானென்று நீர் பயப்படவேண்டாம்; (கடலில் மூழ்கிவிடுவோம் என) நீர் அஞ்சவும் வேண்டாம் என்றும் அறிவித்தோம்.

78. ஃபிர்அவ்ன் தன் படைகளுடன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்; அப்போது அவர்களை மூடிக்கொள்கிற(அலையான)து அவர்களை மூடிக்கொண்டது.

79. ஃபிர்அவ்ன் தன் சமூகத்தாரை வழி கெடுத்தான்;(அவர்களுக்கு)நேர்வழியை அவன் காட்டவுமில்லை.

80. "இஸ்ராயீலின் மக்களே! நிச்சயமாக நாம் உங்களை, உங்களுடைய பகைவனிடமிருந்து ஈடேற்றிக் கொண்டோம்; (ஸினாய் மலையான) 'தூரின்' வலப்பாகத்தை உங்களுக்கு நாம் வாக்களித்தோம்; உணவாக உங்களுக்கு 'மன்னு, ஸல்வா' வையும் இறக்கி வைத்தோம்.

81. "நாம் உங்களுக்கு அளித்தவற்றில் நல்லவற்றிலிருந்து நீங்கள் உண்ணுங்கள்; அதில் நீங்கள் வரம்புமீறியும் விடாதீர்கள்; (மீறினால்) உங்கள் மீது என் கோபம் இறங்கிவிடும்; எவரின் மீது என்னுடைய கோபம் இறங்குகிறதோ அவர், நிச்சயமாக(ஹாவியா எனும் நரகத்தில்)வீழ்ந்து விட்டார்".

82. "இன்னும், எவர் பச்சாதாபப்பட்டு (பாவத்திலிருந்து தவ்பாச்செய்து), விசுவாசமும் கொண்டு, நற்கருமங்களையும் செய்து அதன் பின்னர் நேர் வழியில் நிலைத்திருக்கிறாரோ அவருக்கு நிச்சயமாக நான் மிக மன்னிக்கிறவன்."

83. மேலும், (அவரிடம்) மூஸாவே! நீர் உம்முடைய சமூகத்தாரை விட்டு (விட்டு நீர் மட்டும் வர) உம்மை அவசரப்படுத்தியது எது? (என்று அல்லாஹ்வாகிய அவன் கேட்டான்).

84. அ(தற்க)வர், "அவர்கள் என் அடிச்சுவட்டின் மீது வருகின்றனர்; என் இரட்சகனே! நீ (என் மீது)திருப்திப்படுவதற்காக துரிதமாக உன்னிடம் (முன்னதாகவே) வந்துவிட்டேன்" என்று கூறினார்.

85. அதற்கு, "நீர் வந்த பின்னர் நிச்சயமாக நாம் உம்முடைய சமூகத்தாரை ஒரு சோதனைக்குள்ளாக்கினோம்; சாமிரீ என்பவன் அவர்களை வழி கெடுத்து விட்டான்" என்று (அவர் ஸினாய் மலைக்கு வந்த சமயம் அல்லாஹ்வாகிய அவன்) கூறினான்.

86. (உடனே) மூஸா கோபங்கொண்டவராக பெரும் வருத்தம் நிறைந்தவராகத் தன்னுடைய சமூகத்தாரிடம் திரும்பி வந்து; "என்னுடைய சமூகத்தார்களே! உங்கள் இரட்சகன் உங்களுக்கு அழகான வாக்குறுதியை அவன் வாக்களிக்கவில்லையா ? எனவே அவ்வாக்குறுதி(யின் காலம்) உங்களுக்கு நீண்டுவிட்டதா? அல்லது உங்கள் மீது, உங்கள் இரட்சகனின் கோபம் இறங்கவேண்டுமென்று நீங்கள் விரும்பியே, எனக்கு நீங்கள் செய்த வாக்குறுதிக்கு மாறு செய்தீர்களா?" என்று அவர் கேட்டார்.

قَالُوْا مَآ اَخْلَفْنَا مَوْعِدَكَ بِمَلْكِنَا وَلٰكِنَّا حُمِّلْنَآ اَوْزَارًا مِّنْ زِيْنَةِ
الْقَوْمِ فَقَذَفْنٰهَا فَكَذٰلِكَ اَلْقَى السَّامِرِيُّ ﴿٨٧﴾ فَاَخْرَجَ لَهُمْ عِجْلًا
جَسَدًا لَّهٗ خُوَارٌ فَقَالُوْا هٰذَآ اِلٰهُكُمْ وَاِلٰهُ مُوْسٰى ۬ فَنَسِيَ ﴿٨٨﴾ اَفَلَا
يَرَوْنَ اَلَّا يَرْجِعُ اِلَيْهِمْ قَوْلًا ۬ وَّلَا يَمْلِكُ لَهُمْ ضَرًّا وَّلَا نَفْعًا ﴿٨٩﴾ ع ٤ ١٣
وَلَقَدْ قَالَ لَهُمْ هٰرُوْنُ مِنْ قَبْلُ يٰقَوْمِ اِنَّمَا فُتِنْتُمْ بِهٖ ۚ وَاِنَّ
رَبَّكُمُ الرَّحْمٰنُ فَاتَّبِعُوْنِيْ وَاَطِيْعُوْٓا اَمْرِيْ ﴿٩٠﴾ قَالُوْا لَنْ نَّبْرَحَ
عَلَيْهِ عٰكِفِيْنَ حَتّٰى يَرْجِعَ اِلَيْنَا مُوْسٰى ﴿٩١﴾ قَالَ يٰهٰرُوْنُ مَا
مَنَعَكَ اِذْ رَاَيْتَهُمْ ضَلُّوْٓا ﴿٩٢﴾ اَلَّا تَتَّبِعَنِ ۭ اَفَعَصَيْتَ اَمْرِيْ ﴿٩٣﴾
قَالَ يَبْنَؤُمَّ لَا تَاْخُذْ بِلِحْيَتِيْ وَلَا بِرَاْسِيْ ۚ اِنِّيْ خَشِيْتُ اَنْ
تَقُوْلَ فَرَّقْتَ بَيْنَ بَنِيْٓ اِسْرَآءِيْلَ وَلَمْ تَرْقُبْ قَوْلِيْ ﴿٩٤﴾ قَالَ
فَمَا خَطْبُكَ يٰسَامِرِيُّ ﴿٩٥﴾ قَالَ بَصُرْتُ بِمَا لَمْ يَبْصُرُوْا بِهٖ
فَقَبَضْتُ قَبْضَةً مِّنْ اَثَرِ الرَّسُوْلِ فَنَبَذْتُهَا وَكَذٰلِكَ سَوَّلَتْ
لِيْ نَفْسِيْ ﴿٩٦﴾ قَالَ فَاذْهَبْ فَاِنَّ لَكَ فِي الْحَيٰوةِ اَنْ تَقُوْلَ لَا
مِسَاسَ ۠ وَاِنَّ لَكَ مَوْعِدًا لَّنْ تُخْلَفَهٗ ۚ وَانْظُرْ اِلٰٓى اِلٰهِكَ الَّذِيْ
ظَلْتَ عَلَيْهِ عَاكِفًا ۭ لَنُحَرِّقَنَّهٗ ثُمَّ لَنَنْسِفَنَّهٗ فِي الْيَمِّ نَسْفًا ﴿٩٧﴾

87. அ(தற்க)வர்கள் நாங்கள் உமக்குச் செய்த வாக்குறுதிக்கு எங்கள் சக்தி கொண்டு(சுயமாக) மாறு செய்யவில்லை;என்றாலும்,நாங்கள் (ஃபிர்அவ்னுடைய) சமூகத்தாரின் அலங்கார (ஆபரண)ங்களிலிருந்து கனமான சுமைகளைச் சுமத்தப்பட்டோம்; ஆகவே, அவற்றை நாங்கள் (நெருப்பில்) எறிந்தோம்; அவ்வாறே சாமிரீயும்(தன்னிடமிருந்தவற்றை) எறிந்தான்.

88. "பின்னர், அவன் அவர்களுக்காக ஒரு காளைக் கன்றை_(உருவாக்கி) உடலாக வெளியாக்கினான்; அதற்கு (அர்த்தமற்ற) சப்தமுமிருந்தது; (இதைக்கேட்ட) சிலர், "இதுதான் உங்களுடைய(வணக்கத்திற்குரிய) இரட்சகனும், மூஸாவினுடைய (வணக்கத்திற்குரிய) இரட்சகனுமாகும்; (இதனை) அவர் (மூஸா) மறந்து (மலைக்குச் சென்று) விட்டார்" என்று கூறினார்கள்.

89. நிச்சயமாக, அவர்களுடைய எந்தப் பேச்சுக்கும் அவர்களின்பால் அ(க்காளை மாடான)து (பதில் கூற) திரும்பாமல் இருப்பதையும், அவர்களுக்கு தீமையோ நன்மையோ செய்யச் சக்திபெறாமல் இருப்பதையும் அவர்கள் பார்க்க வில்லையா?

90. இன்னும், (இதற்கு) முன்னதாகவே ஹாரூன் அவர்களிடம், "என்னுடைய சமூகத்தார்களே! நீங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டதெல்லாம் இதைக் கொண்டுதான்; நிச்சயமாக உங்கள் இரட்சகன் அர்ரஹ்மான்தான்; (இதுவல்ல) ஆகவே என்னைப்பின்பற்றுங்கள்; என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள் என திட்டமாகக் கூறியிருந்தார்.

91. அ(தற்க)வர்கள் "மூஸா எங்கள் பால் திரும்பி வரும்வரையில் இதன் (வணக்கத்தின்) மீதே நிலைத்தவர்களாக நீங்காது இருப்போம்" என்று கூறி விட்டார்கள்.

92. (மூஸா, ஹாரூனிடம்) "ஹாரூனே! இவர்கள் வழிகெட்டுவிட்டார்கள் என்பதை நீர் கண்டபோது (அதை மறுக்காமலிருக்க) எது உம்மைத் தடுத்தது ?" எனக்கேட்டார்.

93. "நீர் என்னைப் பின்பற்றுவதிலிருந்து (உம்மைத்தடுத்தது எது?) என் கட்டளைக்கு மாறு செய்தீரா?" (என்று கேட்டார்).

94. அ(தற்க)வர் " என் தாயின் மகனே! என்னுடைய தாடியையும், என்னுடைய தலையையும் பிடி(த்திழு)க்காதீர்; இஸ்ராயீலின் மக்களுக்கிடையில், நீர்பிரிவினையை உண்டு பண்ணிவிட்டீர்; என்னுடைய வார்த்தைக்காக நீர் காத்திருக்கவில்லை என்று நீர் கூறுவீர் என்பதை நிச்சயமாக நான் பயந்தேன்" என்று கூறினார்.

95. (பின்னர், மூஸா) "சாமிரீயே! உன் விஷயமென்ன? எனக் கேட்டார்.

96. அ(தற்க)வன், "அவர்கள் பார்க்காத (வியப்பான) ஒன்றை நான் பார்த்தேன். தூதருடைய (அடிச்)சுவட்டிலிருந்து ஒரு பிடி (மண்) பிடித்து அதில் எறிந்தேன்; இவ்வாறு (செய்யுமாறு) என் மனம் என்னைத் தூண்டிற்று" என்று கூறினான்.

97. (அதற்கு) மூஸா ("இங்கிருந்து) நீ சென்று விடு; நிச்சயமாக நீ (யாரைப்பார்த்தாலும்) என்னைத் தீண்டாதீர் என்று கூறுவதுதான் இவ்வுலக வாழ்க்கையில் உனக்குரியது.(மறுமையிலோ,) நிச்சயமாக உனக்கு ஒரு தவணையும் உண்டு; அதில் நீ மாற்றம் செய்யப்படமாட்டாய்;"(அதிலிருந்து நீ தப்பிவிட மாட்டாய்) மேலும், (வணக்கம் செலுத்துவது கொண்டு) "எதன் மீது நீ நிலையானவனாக இருந்தாயோ அத்தகைய உனது (வணக்கத்திற்குரிய) தெய்வத்தைப்பார்; நிச்சயமாக நாம் அதனை நெருப்பிலிட்டு எரிப்போம்; பின்னர், திண்ணமாகக் கடலில் அதை முற்றிலுமாகத் தூவி விடுவோம்" என்று கூறினார்.

اِنَّمَآ اِلٰهُكُمُ اللّٰهُ الَّذِيْ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ؕ وَسِعَ كُلَّ شَيْءٍ عِلْمًا ﴿٩٨﴾ كَذٰلِكَ
نَقُصُّ عَلَيْكَ مِنْ اَنْۢبَآءِ مَا قَدْ سَبَقَ ۚ وَقَدْ اٰتَيْنٰكَ مِنْ لَّدُنَّا
ذِكْرًا ۚۖ ﴿٩٩﴾ مَنْ اَعْرَضَ عَنْهُ فَاِنَّهٗ يَحْمِلُ يَوْمَ الْقِيٰمَةِ وِزْرًا ۙ ﴿١٠٠﴾ خٰلِدِيْنَ
فِيْهِ ؕ وَسَآءَ لَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ حِمْلًا ۙ ﴿١٠١﴾ يَّوْمَ يُنْفَخُ فِي الصُّوْرِ وَنَحْشُرُ
الْمُجْرِمِيْنَ يَوْمَئِذٍ زُرْقًا ۚۖ ﴿١٠٢﴾ يَّتَخَافَتُوْنَ بَيْنَهُمْ اِنْ لَّبِثْتُمْ اِلَّا
عَشْرًا ﴿١٠٣﴾ نَحْنُ اَعْلَمُ بِمَا يَقُوْلُوْنَ اِذْ يَقُوْلُ اَمْثَلُهُمْ طَرِيْقَةً اِنْ
لَّبِثْتُمْ اِلَّا يَوْمًا ﴿١٠٤﴾ وَيَسْـَٔلُوْنَكَ عَنِ الْجِبَالِ فَقُلْ يَنْسِفُهَا رَبِّيْ نَسْفًا ۙ ﴿١٠٥﴾ ع ٥ ١٤
فَيَذَرُهَا قَاعًا صَفْصَفًا ۙ ﴿١٠٦﴾ لَّا تَرٰى فِيْهَا عِوَجًا وَّلَآ اَمْتًا ؕ ﴿١٠٧﴾ يَوْمَئِذٍ
يَّتَّبِعُوْنَ الدَّاعِيَ لَا عِوَجَ لَهٗ ۚ وَخَشَعَتِ الْاَصْوَاتُ لِلرَّحْمٰنِ
فَلَا تَسْمَعُ اِلَّا هَمْسًا ﴿١٠٨﴾ يَوْمَئِذٍ لَّا تَنْفَعُ الشَّفَاعَةُ اِلَّا مَنْ اَذِنَ
لَهُ الرَّحْمٰنُ وَرَضِيَ لَهٗ قَوْلًا ﴿١٠٩﴾ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ
وَلَا يُحِيْطُوْنَ بِهٖ عِلْمًا ﴿١١٠﴾ وَعَنَتِ الْوُجُوْهُ لِلْحَيِّ الْقَيُّوْمِ ؕ وَقَدْ
خَابَ مَنْ حَمَلَ ظُلْمًا ﴿١١١﴾ وَمَنْ يَّعْمَلْ مِنَ الصّٰلِحٰتِ وَهُوَ مُؤْمِنٌ
فَلَا يَخٰفُ ظُلْمًا وَّلَا هَضْمًا ﴿١١٢﴾ وَكَذٰلِكَ اَنْزَلْنٰهُ قُرْاٰنًا عَرَبِيًّا وَّ
صَرَّفْنَا فِيْهِ مِنَ الْوَعِيْدِ لَعَلَّهُمْ يَتَّقُوْنَ اَوْ يُحْدِثُ لَهُمْ ذِكْرًا ﴿١١٣﴾

98. "உங்கள் (வணக்கத்திற்குரிய)நாயன் அல்லாஹ்( ஒருவன்)தான்; அவன் எத்தகையவனென்றால் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் (வேறு எவரும்) இல்லை; அவன், ஒவ்வொரு பொருளையும் (தன்) அறிவால் விசாலமாக (அறிந்து) வைத்துள்ளான்" (என்றும் மூஸா) கூறினார்.

99. (நபியே!) இவ்வாறே (உமக்கு) முன்னர் சென்றுபோனவர்களின் செய்திகளை நாம் உமக்குக் கூறுவோம்; நம்மிடமிருந்து (இவ்வேதமாகிய) நல்லுபதேசத்தை நிச்சயமாக நாம் உமக்குக் கொடுத்திருக்கிறோம்.

100. எவர் அதனைப் புறக்கணிக்கின்றாரோ நிச்சயமாக அவர், மறுமை நாளில் (பெரியதொரு) பாவத்தை (அதற்குரிய தண்டனையையே) சுமப்பார்.

101. அ(ந்நரகத்)தில் அவர்கள் நிரந்தரமாக இருப்பவர்கள்; மறுமை நாளில், சுமையால் அவர்களுக்கு அது மிகக் கெட்டது.

102. (ஸூர்) "குழல்" ஊதப்படும் நாளை ( நினைவு கூர்வீராக! ) குற்றவாளிகளை அந்நாளில், நீலம் பூத்த (கண்களுடைய)வர்களாக (இழுத்துக் கொண்டு வந்து ) ஒன்றுதிரட்டுவோம்.

103. நீங்கள் பத்து ( நாட்கள் ) தவிர (உலகில் ) தங்கியிருக்கவில்லை என்று அவர்களுக்கு மத்தியில் இரகசியமாக பேசிக்கொள்வார்கள்.

104. அவர்களில் நிறையறிவுடையவர்கள் (அவர்களிடம்) "ஒரு நாளேயன்றி நீங்கள் தங்கியிருக்கவில்லை" என்று கூறும் சமயத்தில், அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை நாம் நன்கறிவோம்.

105. மேலும், (நபியே!) உம்மிடம் அவர்கள் மலைகளைப் பற்றிக்கேட்கிறார்கள்; (அதற்கு) நீர் கூறும்: என் இரட்சகன் அவைகளைத் தூள் தூளாக்கிவிடுவான்.

106. (பின்னர்) அவற்றை (ப்புற்பூண்டோ, கட்டிடங்களோ இல்லாத) சம வெளியாக்கி விட்டுவிடுவான்.

107. அதில் பள்ளத்தையோ, மேட்டையோ நீர் காணமாட்டீர்.

108. அந்நாளில் (ஸூர் ஊதுகின்ற) அழைப்பாளரையே பின்பற்றிச் செல்வார்கள்; அதில் எவ்விதக் கோணலும்(மறுப்பும்) இருக்காது; சப்தங்கள் (அனைத்தும்) அர்ரஹ்மானுக்குப் பணிந்து(அடங்கி)விடும்; ஆகவே, (மெதுவான) காலடிச் சப்தத்தைத் தவிர (வேறெதனையும்) நீர் கேட்கமாட்டீர்.

109. அந்நாளில் அர்ரஹ்மான் எவருக்கு அனுமதி அளித்து, சொல்லால் அவருக்காக பொருந்திக்கொண்டானோ அவரைத் தவிர (மற்றெவருக்கும்) பரிந்துரை பயனளிக்காது.

110. அவர்களுக்கு முன்னுள்ளதையும், அவர்களுக்குப் பின்னுள்ளதையும் அவன் நன்கறிவான்; அவர்கள் அவனை(த் தங்கள்) கல்வியால் தீர அறிந்து கொள்ள மாட்டார்கள்.

111. (அந்நாளில் அல்லாஹுவான) நிலையானவனாகிய நித்திய ஜீவனுக்கு(முன்) யாவருடைய முகங்களும் கவிழ்ந்துவிடும்; எவன்(இணையாக்குதல் என்னும்) அநியாயத்தைச் சுமந்து கொண்டானோ அவன் திட்டமாக நஷ்டமடைந்துவிட்டான்.

112. எவர் விசுவாசங் கொண்ட நிலையில், நற்கருமங்களையும் செய்கிறாரோ அவர், (தனக்கு) அநீதத்தையோ, (தன்செயல்களுக்குரிய நற்கூலியில்) குறைவையோ பயப்படமாட்டார்.

113. இவ்வாறே, இதனை அரபி மொழியிலான குர்ஆனாக நாம் இறக்கிவைத்தோம்; அவர்கள் பயபக்தியுடையவர்களாக ஆவதற்காக, அல்லது இது அவர்களுக்கு நல்லுபதேசத்தை உண்டாக்குவதற்காக இதில் நாம் (நம்முடைய வேதனையைப் பற்றி) அவர்களுக்கு எச்சரிக்கையை (பலவாறாக) திரும்பத்திரும்ப விவரித்திருக்கிறோம்.

فَتَعٰلَى اللّٰهُ الْمَلِكُ الْحَقُّ ۚ وَلَا تَعْجَلْ بِالْقُرْاٰنِ مِنْ قَبْلِ اَنْ
يُّقْضٰۤى اِلَيْكَ وَحْيُهٗ ۫ وَقُلْ رَّبِّ زِدْنِىْ عِلْمًا ﴿١١٤﴾ وَلَقَدْ عَهِدْنَاۤ
اِلٰۤى اٰدَمَ مِنْ قَبْلُ فَنَسِىَ وَلَمْ نَجِدْ لَهٗ عَزْمًا ﴿١١٥﴾ وَاِذْ قُلْنَا لِلْمَلٰٓئِكَةِ ع ٦ ١١ ١٥
اسْجُدُوْا لِاٰدَمَ فَسَجَدُوْۤا اِلَّاۤ اِبْلِيْسَ ؕ اَبٰى ﴿١١٦﴾ فَقُلْنَا يٰۤاٰدَمُ اِنَّ هٰذَا
عَدُوٌّ لَّكَ وَلِزَوْجِكَ فَلَا يُخْرِجَنَّكُمَا مِنَ الْجَنَّةِ فَتَشْقٰى ﴿١١٧﴾ اِنَّ
لَكَ اَلَّا تَجُوْعَ فِيْهَا وَلَا تَعْرٰى ۙ ﴿١١٨﴾ وَاَنَّكَ لَا تَظْمَؤُا فِيْهَا وَلَا تَضْحٰى ﴿١١٩﴾
فَوَسْوَسَ اِلَيْهِ الشَّيْطٰنُ قَالَ يٰۤاٰدَمُ هَلْ اَدُلُّكَ عَلٰى شَجَرَةِ
الْخُلْدِ وَمُلْكٍ لَّا يَبْلٰى ﴿١٢٠﴾ فَاَكَلَا مِنْهَا فَبَدَتْ لَهُمَا سَوْاٰتُهُمَا
وَطَفِقَا يَخْصِفٰنِ عَلَيْهِمَا مِنْ وَّرَقِ الْجَنَّةِ ۫ وَعَصٰۤى اٰدَمُ رَبَّهٗ
فَغَوٰى ۖ ﴿١٢١﴾ ثُمَّ اجْتَبٰهُ رَبُّهٗ فَتَابَ عَلَيْهِ وَهَدٰى ﴿١٢٢﴾ قَالَ اهْبِطَا
مِنْهَا جَمِيْعًا بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۚ فَاِمَّا يَاْتِيَنَّكُمْ مِّنِّىْ هُدًى ۙ۬
فَمَنِ اتَّبَعَ هُدَاىَ فَلَا يَضِلُّ وَلَا يَشْقٰى ﴿١٢٣﴾ وَمَنْ اَعْرَضَ
عَنْ ذِكْرِىْ فَاِنَّ لَهٗ مَعِيْشَةً ضَنْكًا وَّنَحْشُرُهٗ يَوْمَ الْقِيٰمَةِ
اَعْمٰى ﴿١٢٤﴾ قَالَ رَبِّ لِمَ حَشَرْتَنِىْۤ اَعْمٰى وَقَدْ كُنْتُ بَصِيْرًا ﴿١٢٥﴾
قَالَ كَذٰلِكَ اَتَتْكَ اٰيٰتُنَا فَنَسِيْتَهَا ۚ وَكَذٰلِكَ الْيَوْمَ تُنْسٰى ﴿١٢٦﴾

114. எனவே உண்மையான அரசனாகிய அல்லாஹ் (இணை வைப்பவர்களின் இணைவைப்பிலிருந்து) உயர்ந்துவிட்டான். (நபியே!) குர்ஆனைக்கொண்டு _அதனுடைய அறிவிப்பு உம்மளவில் முடிக்கப்படுவதற்கு முன்னதாக (அதனை ஓத) நீர் அவசரப்படவேண்டாம்; "இன்னும், என் இரட்சகனே! எனக்கு அறிவை அதிகப்படுத்துவாயாக" என்று நீர் (பிரார்த்தனை செய்து) கூறுவீராக!

115. மேலும், இதற்கு முன்னர், ஆதமிடம் நிச்சயமாக நாம் வாக்குறுதி வாங்கியிருந்தோம்; பின்னர், (அதனை) அவர் மறந்து விட்டார்; மேலும், (அதன்படி நடக்கும்) உறுதியை நாம் அவரிடம் காணவில்லை.

116. மேலும், மலக்குகளிடம் நீங்கள் ஆதமுக்குச் சிரம்பணியுங்கள் என்று நாம் கூறிய சமயத்தில், இப்லீஸைத் தவிர அவர்கள் சிரம்பணிந்தார்கள்; அவன் விலகிக்கொண்டான் (என்பதை நபியே! நீர் நினைவு கூர்வீராக).

117. ஆதலால் (நாம் ஆதமிடம்,) "ஆதமே! நிச்சயமாக இவன் உமக்கும், உம்முடைய மனைவிக்கும் விரோதியாவான்; எனவே உங்களிருவரையும் இச்சுவனத்திலிருந்து (தன் சூழ்ச்சியால்) அவன் நிச்சயமாக வெளியேற்றிவிட வேண்டாம்; அவ்வாறெனில், நீர் கஷ்டத்திற்குள்ளாகிவிடுவீர்" என்று கூறினோம்.

118. நீர், பசியில்லாதிருப்பதும், நீர் நிர்வாணமாகாதிருப்பதும் இ(ச்சுவனத்)தில் நிச்சயமாக உமக்குண்டு.

119. அன்றியும் இதில் நிச்சயமாக நீர் தாகிக்கவுமாட்டீர்; வெயிலில் (கஷ்டப்)படவுமாட்டீர் (என்று கூறினோம்).

120. ஆனால் ஷைத்தான் அவருக்கு (அவர் மனதில்) ஊசாட்டத்தை உண்டாக்கி விட்டான்; நித்தியவாழ்வளிக்கும் மரத்தையும், முடிவில்லா அரசாங்கத்தையும், உமக்கு நான் அறிவித்துத்தரட்டுமா? என்று கேட்டான்.

121. (முடிவாக) அவ்விருவரும் அ(ம்மரத்)திலிருந்து புசித்து விட்டார்கள்; உடனே (அவ்விருவரின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்த) அவ்விருவரின் மர்மஸ்தானங்களும் அவ்விருவருக்கும் வெளியாயின; அச்சுவனத்தின் இலைகளைக் கொண்டு, தங்களை மறைத்துக்கொள்ள அவ்விருவரும் முற்பட்டனர்; ஆகவே, ஆதம் தன் இரட்சகனுக்கு மாறுசெய்துவிட்டார்; எனவே, அவர் வழிதவறிவிட்டார்.

122. பின்னர், அவருடைய இரட்சகன் அவரைத்தேர்ந்தெடுத்தான்; அவருடைய தவ்பாவை (பாவமீட்சியை) ஏற்று (அவருக்கு) நல்வழியும் காட்டினான்.

123. (அன்றி அவ்விருவரிடம்) "நீங்கள் இருவரும் இதிலிருந்து சேகரமாக இறங்கிவிடுங்கள்; உங்க(ளுடைய சந்ததிக)ளில் சிலர் சிலருக்கு விரோதிகளாவார்கள்; நிச்சயமாக என்னிடமிருந்து நேர்வழி உங்களுக்கு வரும். ஆகவே, என்னுடைய நேர்வழியை எவர் பின்பற்றுகிறாரோ, அவர் வழி தவறமாட்டார்; துர்பாக்கியவானாக ஆகவுமாட்டார்" என்று கூறினான்.

124. மேலும், "எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கின்றாரோ, நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது; மேலும், மறுமை நாளில் நாம் அவனைக் குருடனாகவே எழுப்புவோம்.

125. (அதுசமயம்) அவன் "என் இரட்சகனே! ஏன் என்னை குருடனாக நீ எழுப்பினாய்? நான் திட்டமாக (உலகத்தில்) பார்க்கிறவனாக இருந்தேனே" என்று கேட்பான்.

126. (அதற்கு) "அவ்வாறே! நம் வசனங்கள் உன்னிடம் வந்தன; நீ அவைகளை மறந்துவிட்டாய்; (நீ மறந்த) அவ்வாறே இன்றையத்தினம் நீயும் (நம் அருளிலிருந்து) மறக்கப்படுகிறாய்" என்று (அல்லாஹ்) கூறுவான்.

وَكَذٰلِكَ نَجْزِيْ مَنْ اَسْرَفَ وَلَمْ يُؤْمِنْ بِاٰيٰتِ رَبِّهٖ ؕ وَلَعَذَابُ
الْاٰخِرَةِ اَشَدُّ وَاَبْقٰى ﴿۱۲۷﴾ اَفَلَمْ يَهْدِ لَهُمْ كَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ مِّنَ
الْقُرُوْنِ يَمْشُوْنَ فِيْ مَسٰكِنِهِمْ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّاُولِي النُّهٰى ﴿۱۲۸﴾ ع ۷ ۱۶
وَلَوْلَا كَلِمَةٌ سَبَقَتْ مِنْ رَّبِّكَ لَكَانَ لِزَامًا وَّاَجَلٌ مُّسَمًّى ﴿۱۲۹﴾ ؕ
فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ
وَقَبْلَ غُرُوْبِهَا ۚ وَمِنْ اٰنَآئِ الَّيْلِ فَسَبِّحْ وَاَطْرَافَ النَّهَارِ
لَعَلَّكَ تَرْضٰى ﴿۱۳۰﴾ وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ اِلٰى مَا مَتَّعْنَا بِهٖۤ اَزْوَاجًا
مِّنْهُمْ زَهْرَةَ الْحَيٰوةِ الدُّنْيَا ۙ۬ لِنَفْتِنَهُمْ فِيْهِ ؕ وَرِزْقُ رَبِّكَ
خَيْرٌ وَّاَبْقٰى ﴿۱۳۱﴾ وَاْمُرْ اَهْلَكَ بِالصَّلٰوةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ؕ لَا
نَسْئَلُكَ رِزْقًا ؕ نَحْنُ نَرْزُقُكَ ؕ وَالْعَاقِبَةُ لِلتَّقْوٰى ﴿۱۳۲﴾ وَقَالُوْا
لَوْلَا يَاْتِيْنَا بِاٰيَةٍ مِّنْ رَّبِّهٖ ؕ اَوَلَمْ تَاْتِهِمْ بَيِّنَةُ مَا فِي الصُّحُفِ
الْاُوْلٰى ﴿۱۳۳﴾ وَلَوْ اَنَّاۤ اَهْلَكْنٰهُمْ بِعَذَابٍ مِّنْ قَبْلِهٖ لَقَالُوْا
رَبَّنَا لَوْلَاۤ اَرْسَلْتَ اِلَيْنَا رَسُوْلًا فَنَتَّبِعَ اٰيٰتِكَ مِنْ قَبْلِ
اَنْ نَّذِلَّ وَنَخْزٰى ﴿۱۳۴﴾ قُلْ كُلٌّ مُّتَرَبِّصٌ فَتَرَبَّصُوْا ۚ
فَسَتَعْلَمُوْنَ مَنْ اَصْحٰبُ الصِّرَاطِ السَّوِيِّ وَمَنِ اهْتَدٰى ﴿۱۳۵﴾ ع ۸ ۱۷

127. எனவே, தன் இரட்சகனின் வசனங்களை விசுவாசிக்காது வரம்பு மீறி நடக்கின்றவருக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்; (அவனுக்குக் கிடைக்கும்) மறுமையின் வேதனையோ மிகக் கடினமானதும், நிலையானதுமாகும்.

128. இவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினரை நாம் அழித்து விட்டோம் என்பது இவர்களை நேர்வழியில் செலுத்தவில்லையா? (அழிக்கப்பட்ட) அவர்கள் குடியிருந்த இடங்களில் (சமீபமாகவே) இவர்கள் செல்கின்றனர்; அறிவுடையோருக்கு, நிச்சயமாக அதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

129. மேலும், (நபியே! தீர்ப்பளிக்கப்படுவது மறுமையில்தான் என்ற) உம்முடைய இரட்சகனின் வாக்கு மற்றும் குறிப்பிடப்பட்ட தவணை முந்தியிரா விட்டால் அ(ழிவான)து கட்டாயமாகியிருக்கும்.

130. ஆகவே, அவர்கள் (உம்மைக் குறை) கூறுவதைப் பற்றி நீர் பொறுத்துக் கொள்வீராக! மேலும், சூரிய உதயத்திற்கு முன்னரும், அது மறைவதற்கு முன்னரும் உம்முடைய இரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டிருப்பீராக! இரவு நேரங்களிலும் (இவ்வாறே) பகலின் ஓரங்களிலும் (இரட்சகனைப் புகழ்ந்து) துதி செய்து கொண்டிருப்பீராக! இதனால் நீர் திருப்தியடையலாம்.

131. (நபியே!) அவர்களில் சில பிரிவாருக்கு உலக வாழ்க்கையின் அலங்காரமாக எதைக்கொண்டு சுகமனுபவிக்கச் செய்திருக்கிறோமோ அதன் பக்கம் உம்முடைய இரு கண்களையும் நீர் திண்ணமாகச்செலுத்த வேண்டாம்; (இவையாவும்) அதில் அவர்களை சோதிப்பதற்காகவே (நாம் கொடுத்திருக்கிறோம்). ஆனால் உம் இரட்சகன் (உமக்கு மறுமையில்) கொடுக்கவிருப்பது மிகச்சிறந்ததும், மிக நிலையானதுமாகும்.

132. மேலும், (நபியே!) "நீர் உம் குடும்பத்தினரைத் தொழுகையைக்கொண்டு ஏவுவீராக! நீரும் அதன் மீது (பொறுமையுடன்) நிலைத்திருப்பீராக! நாம் உம்மிடம் உணவைக்கேட்கவில்லை; உமக்கு நாமே உணவளிக்கிறோம்; மேலும் நல்லமுடிவு பயபக்தி(உடையவர்களு)க்கே உரியதாகும்.

133. "தன் இரட்சகனிடமிருந்து ஓர் அத்தாட்சியை அவர் நம்மிடம் கொண்டுவர வேண்டாமா?" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; முந்திய வேதங்களிலுள்ள தெளிவு, (அத்தாட்சி) அவர்களிடம் வரவில்லையா?

134. மேலும், (நம் தூதராகிய) இவருக்கு முன்னதாகவே நிச்சயமாக நாம் இவர்களை வேதனையைக் கொண்டு அழித்திருந்தால், "எங்கள் இரட்சகனே! நீ எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பியிருக்க வேண்டாமா? (அவ்வாறிருந்தால்) நாங்கள் இழிவுபடுவதற்கும், கேவலப்படுவதற்கும் முன்னதாகவே உன்னுடைய வசனங்களை நாங்கள் பின்பற்றியிருப்போமே" என்று கூறுவார்கள்.

135. (நபியே!) நீர் கூறுவீராக: ஒவ்வொருவரும் (மறுமைநாளை) எதிர்பார்த்திருப்பவரே! ஆகவே, நீங்களும் எதிர்பார்த்திருங்கள்; நேரான வழியை உடையவர்கள் யார்? என்பதையும், நேர்வழி பெற்றவர் யார்? என்பதையும் (பின்னர்) நீங்கள் நிச்சயமாக நன்கறிந்துகொள்வீர்கள்.